1973 நவம்பர் 26]

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) கோவை மாவட்டத்தில் 1—4—1967 முதல் 31—3—1973 முடிய 24,734.32 எக்கரா நிலங்களை 10,894 பேர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டன. இது தவிர, 1972-73 ஆண்டில் 300 ஏக்கரா முட்காடு மற்றும் புதர் நிலங்களும் நிலமற்ற ஏழைகளுக்கு விவசாயத்திற்காக ஒப்படை செய்யப்பட்டன.

ஆதீனங்கள், மடங்களின் கீழுள்ள பிரிஹோல்ட் நிலங்கள்

*406 **வினு—திரு. ச. சங்குமுத்து தேவர்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதீனங்களுக்கும், மடங்களுக்கும் உட்பட்ட பிரிஹோல்ட் (Free-hold) நிலப்பரப்பில் அடங்கியுள்ள புறம்போக்கு நிலங்கள் எல்லாம் பஞ்சாயத்து சட்டப்படி பஞ்சாயத்துக்களுக்கு ஒப்படை செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அந்த நிலங்களின் விவரங்கள் யாவை? மாவட்டவாரியாக?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆதீனங்களுக்கும் மடங்களுக்கும் உட்பட்ட பிரிஹோல்ட் நிலப்பரப்பில் தற்போது உள்ள நிலப் பாகுபாட்டின்படி புறம்போக்கு என எந்த நிலமும் பாகுபாடு செய்யப்படவில்லை. எனவே அவைகளைப் பஞ்சாயத்து சட்டப்படி பஞ்சாயத்துக்களுக்கு ஒப்படை செய்வது சம்மந்தமாக செயற்குறிப்பு எதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திருப்புவனம் ஒன்றியத்தில் இணைப்புச் சாலைகள்

*407 **வினு—திரு. த. சோனையா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் (Category II) இணைப்புச்சாலைக்கு அரசு எத்தனை சதவிகிதம் மானியம் வழங்கியுள்ளது?

(இ) அவ்வேலைக்காக மீதித்தொகை எப்படி வசூலிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) இராமநாதபுரம் மாவட்டம், திருபுவனம் ஊராட்சி ஒன்றியத்தில் கிராமப் பணித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் இணைப்புச்சாலை வேலைகளுக்காகும் மொத்தச் செலவில் 55 சதவிகிதம் அரசு மான்யமாகவும் மீதமுள்ள 45 சதவிகிதம் ஊராட்சி ஒன்றியத்தினால் பொது நன்கொடையாகவும் ஈடுசெய்யப்படுகிறது.

திரு. த. சோனையா: தலைவர் அவர்களே, திருபுவனம் ஊராட்சி ஒன்றியம் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தது. இராமநாதபுரம் மாவட்டம் பஞ்சப் பகுதி, வறட்சிப் பகுதி, நீண்ட காலமாக மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டு வந்துள்ள பகுதி. அங்கிருக்கிற திருபுவனம் ஊராட்சி ஒன்றிய நிதி வசதி ஒரு பங்கினைக் கூடக் கொடுக்க வாய்ப்பு இல்லாதிருக்கிற காரணத்தினால் முழுமையுமே அரசாங்கம் ஏற்று நடத்த, அதற்கு விசேஷ சலுகை தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, திருபுவனம் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கிறது என்பது தெரியும். திருபுவனம் ஊராட்சி ஒன்றியத் தலைவராக சட்டப் பேரவை உறுப்பினர் அருமை சோனையா அவர்கள் இருக்கிறார்கள் என்றே கருதுகிறேன். அவர்கள் ஏற்றிருக்கிற ஊராட்சி ஒன்றியத்திற்கு 29,299 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுபோக மீதியுள்ள பணத்தை அவர்கள் தான் வசூல் செய்துகொள்ள வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. திருபுவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தவர்கள் வறண்ட, பஞ்சப் பகுதியாகிய இராமநாதபுரம் மாவட்டத்திற்குள் இருக்கலாம். அது பஞ்சப் பகுதியே தவிர அவர்கள் பஞ்சை அல்ல என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அது பஞ்சப் பகுதியாக அறிவிக்கப்பட்டிருப்பதன் காரணத்தினால் பற்பல திட்டங்களின் மூலம் அபிவிருத்தி வேலைகளும் அங்கே செய்யப்பட்டு வருகின்றன. எனவே இதில் முழுமையையும் அரசு ஏற்றுக்கொள்வதற்கில்லை.